## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (21.03.2018 முதல் 25.03.2018)

**அறிக்கைஎண் 23/2018** **தேதி:20.03.2018**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 28°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 16°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலைஈரோடு (21.03.2018 முதல் 25.03.2018)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். 23 மற்றும் 24.3.18 தேதிகளில் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35°செ முதல் 37°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 முதல் 75 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 45 முதல் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6-8 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | மேகமூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 21.03.18 | 0 | 35 | 23 | 6 | 70 | 50 | 8 | தெற்கு |
| 22.03.18 | 6 | 35 | 23 | 6 | 70 | 50 | 8 | தெற்கு |
| 23.03.18 | 30 | 36 | 24 | 4 | 70 | 50 | 6 | கிழக்கு |
| 24.03.18 | 20 | 36 | 24 | 4 | 75 | 45 | 6 | கிழக்கு |
| 25.03.18 | 4 | 37 | 24 | 4 | 75 | 45 | 6 | கிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் 23 மற்றும் 24 தேதிகளில் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் அனைத்துப் பயிர்களுக்கும் பயிர்க்கழிவு மூடாக்கிட்டு கிடைக்கப்பெற்ற ஈரப்பதம் ஆவியாகி வீணாகாமல் தடுக்கவும்
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையைப் பயன்படுத்தி கோடை உழவு செய்வதின் மூலம் களைகளை கட்டுப்படுத்துவதோடு மட்டும் இல்லாமல் மழை நீர் வழிந்தோடாமல் நிலத்தில் சேமிக்கலாம்.
- ✓ தென்னை மரத்தைச் சுற்றி உள் உற்சாய்வு வட்டவடிவ பாத்திகளை அமைப்பது மழை நீரை தக்க முறையில் பயன் படுத்தவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினால் பூக்கும் தருவாயில் உள்ள கோடை எள் பயிருக்கு தேவையான ஈரப்பதம் கிடைக்காவிடில் நீர்பாசனம் செய்து பூ உதிர்வதை தடுக்கவும்.
- ✓ நிலவும் வானிலையில் முன்பட்ட கரும்பிற்கு ஒரு எக்டருக்கு 166 கிலோ யூரியா மற்றும் 75 கிலோபொட்டாஷ் மேலுரமாக இட்டு மண் அணைக்கவும். போதுமானஅளவு மழை கிடைக்கப் பெறவில்லை எனில் உரமிட்டுநீர் பாசனம் செய்யவும்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் மத்தியகால கரும்பு சாகுபடி நிலங்களில் முளைவிட்ட கரும்பு கரணைகளை கொண்டு பாடுவாசி மேற்கொண்டு நீர் பாசனம் செய்யவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினால் பூக்கும் தருவாயில் உள்ள கோடை எள் பயிருக்கு தேவையான ஈரப்பதம் கிடைக்காவிடில் நீர்பாசனம் செய்து பூ உதிர்வதை தடுக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**